

திருத்தக்கதேவர்

TVA 1049

# பூம்பிண்டி பெருமான் அடிகள் பேரறம் துணை

சோழப்பேரரசின் இளவரசரும் தமிழ்ச்சங்கம் ஏற்று போற்றிய மாபெரும் புலவரும், காவிய வழி காட்டி என அறிஞர் பெருமக்களால் வாழ்த்தி வணங்கப்பட்ட கவிச்சக்கரவர்த்தியும் உலகமகா காவியங்களில் ஒன்ருன செந்தமிழ் காப்பியம் சீவக சிந்தாமணியை அருளிச்செய்த திருத்தக்க தேவர் பெருமான் துதி. இதை நாள்தோறும் படித்து பாராயணம் செய்து வந்தால் பெரும் புலவராகலாம் என்பது திண்ணம், தமிழ் அன்பர்கள் பயன் பெற வேண்டி இதை வழங்குகின்றேன்.

# திருத்தக்க தேவர் துதி

(திரு கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனாரவர்கள்

மதுரை.

திருத்தக்க தேவர்எனும் திருநாமம்
உடையவராய்ச் சிறந்து தோன்றி
உருத்தக்க உயிரினங்கள் உயர்போத
நெறியேகி உண்மை காணக்
குருத்தக்க மொழியொளியாற் கூரிருளை
நீக்கியருள் கோவே! உன்றன்
தருத்தக்க வண்மையுடன் தமிழ்ச்சுவையை
நுகர்ந்துள்ளார் தமிழ ரன்றே?

சீவகன்றன் சீவியத்தைத் திவ்வியவோர்
காவியமாத் திகழச் செய்து
பாவகன்ற புலவரெலாம் பலகலைகள்
பயின்றுயரப் பண்பு காட்டி
நாவகன்ற சுவையாரும் நவையகன்று
தமிழ்ச்சுவையை நன்கு மாந்த
பாவகன்ற கலையுலகைப் புகழமையப்
புனைந்தனையே! புதுமை என்னே! 2

காமத்தின் சுவைகண்டார் காமநூல்
என்கின்றார்; கரும நீதித்
தாமத்தின் நிலைகண்டார் தருமநூல்
என்கிறார்; தவங்கள் சார்ந்த
நாமத்தின் நலம்கண்டார் ஞானநூல்
என்கின்றார்; நயந்தோர்க் கெல்லாம்
சேமத்தை யருளுகின்ற சீவகசிந்
தாமணியைச் செய்து தந்தாய். 3

ஈண்டுவந்த இப்பிறப்பின் இயல்தெரிந்து
செயல்தெளிந்து மயல்கள் நீங்கி
மீண்டுவந்து பிறவாமல் மெய்ஞ்ஞான
ஒளிமேவி மேலா யென்றும்
நீண்டுவந்த மானுடங்கள் நிலையான
நிலையடைய நேரே அன்பு
பூண்டுவந்து போதித்த புண்ணியத்தால்
தேவர்எனப் பொலிந்தா யன்றே? 4

பவ்வியசீ வன்களவை பண்பு நலம்
படிந்துவந்து படிமீ தேறித்
திவ்வியபே ரின்பநிலை சேர்ந்துமகிழ்ந்
திருக்குமெனும் திருநூல் ஒன்றை
இவ்வுலகம் உய்ந்திடநீ இனிதருளி
யிருந்துமதை எண்ணா தந்தோ
வெவ்வியதீ வினைகளிலே விரைந்தோடி
விளிகின்றார் வெறியர் என்னே! 5

தன்னுயிர்போல் மன்னுயிரைத் தான்ஓம்பி
வாழினது தவமாய்ப் பொங்கி
உன்னுயிருக் கென்றென்றும் உயரின்ப
நிலையமதாய் ஒளிசெய் தோங்கும்
பொன்னுயிராய் மணியுயிராய் புண்ணியத்தின்
பொற்புயிராய்ப் பொலிவாய் என்றே
மன்னுயிர்கள் உய்திபெற மதியமிர்தம்
வழங்கியவுன் மகிமை வாழி! 6

## சீவக சிந்தாமணியின் சிறப்பு

(கவிஞர் பாரதிதாசனார் அவர்கள்)

தமிழரெலாம் அறிவுடையராதல் வேண்டும்;
தமிழ்என்றால் அவ்வறிவு பெறுதல் கூடும்;
'தமிழ்கற்றல் என்பதுதான் என்ன?' என்றால்,
தமிழ்ச்சான்றோர் அருளியநூல் கற்றலாகும்.
தமிழ்நூற்கள் கற்பதெனில், நூலைச் செய்த
தமிழ்ச்சான்றோர் உளமறிய முயல்வதாகும்
தமிழ்நூல்கட் கமைந்துள்ள உரையைக் கொண்டே
தக்கபடி பொருள்தெரிதல் அருமையாகும். 1

'தொல்காப்பி யர்தமிழர், என்பார்; அன்னார்
சொன்னநூல் தமிழர்நெறி சொல்லிற்
றென்பார்
தொல்காப்பி யத்தினுள செய்யுள் கட்கும்,
தூய்மையிலா உரைசெய்து பொருள்ம
றைப்பார்
'பல்லோரும் புகழ்கின்ற திருக்கு றட்குப்
பரிமீதில் அழகியார் செய்த தொன்றே
நல்ல உரை, என்றுரைப்பார்; வருண பேதம்
நல்காத குறள் அதனை நல்கிற் றென்பார் 2

பெருநூற்கள் உரைபலவும் திருத்த வேண்டும்
பிழைபாடு நீங்காக்கால் அறந்தோன் றாது;
பெரியவர்கள் எதிரிருந்து பொருளைக் கேட்கப்
பிழை நீங்கும்; நல்லறிவு பெறுதல் கூடும்.
திருத்தக்க தேவனார் அருளிச் செய்த
சீவகசிந் தாமணியாம் பெரிய நூலின்
உரைகூறி யருளினார் மூன்றாண் டாக
உயர் புலவர் வேணுகோபாலனாரே. 3

"அப்பெரியர் யார்? என்னில், சைன மென்னும்
அருள்நெறியால் எழுந்தமிழ்நூற்கள், மற்றும்
செப்பரிய சங்கநூல் அனைத்தும் ஆய்ந்து
சிறந்தாரிற் சிறந்தவரே! அவரை இவ்வா
றெப்பரிய பணியாற்றக் கேட்டார் யாவர்?
உயர்காஞ்சிச் சைன இலக்கிய மன்றத்தார்;
இப்போதும் சீவபந்து சீபால், ✻ தென்னாட்
டிளஞ்சினதே வனையுடைய தந்த மன்றம்! 4

சீவகனைப் பாராதே; சேக்கிழாரின்
திருத்தொண்டர் புராணம்பார் என்று கூறும்
நாவகரும் இருக்கின்றார்; அவரை யெல்லாம்
நல்லரென்று சொல்வாரும் வாழ்கின்றார்கள்
சீவகன்போல் வீரத்தைக் காதல் தன்னைச்
செப்புவதோர் நூலுண்டோ? தமிழர் நாட்டின்
பாவகன்ற இலக்கியத்தின் அரசு சிந்தா
மணிஎன்று பகர்ந்திடுதல்மிகையே இல்லை.5

*ஸ்ரீபால்

தமிழ்த்தொண்டு செய்துவரும் வளஞ்சேர் காஞ்சிச்
சைனஇலக்கிய மன்றம் தழைத்து வாழ்க!
அமிழ்திருந்த படிகாட்டும் சீவகன்றன்
அழகிருந்த படிபொருளை ஊட்டி, இந்த
இமிழ்கடல்சேர் தமிழ்நாட்டார்க் கினிய செல்வம்
ஈத்துவந்த வேணுகோபாலனார் தாம்,
தமர் நண்பர் மக்களொடு செல்வம் சீர்த்தி
தனித்தபெரும் புகழ்ஓங்கி வாழ்க நன்றே! 6

ஐம் பெருங்காப்பியங்களில் தலை சிறந்த காப்பியங்களான சீவகசிந்தாமணி - சூளாமணி காப்பியங்களை பெரும்பாலான தமிழ்மக்கள் அறவே மறந்து படிக்காது போனதன் விளைவு, தமிழர் தம் இறைநிலை - அறநெறி அறியாது திசைமாறி - குறிக்கோள் இன்றி துன்பக்கடலில் ஆழ்ந்து கிடக்கின்றனர் திருக்குறள் என்னும் அறநூலுக்கு இலக்கணமாக அமைந்த இலக்கியங்களல்லவா சிந்தாமணியும்-சூளாமணியும் இதை தமிழர் உணரும் நாள் எந்நாளோ!

படித்து மனப்பாடம் செய்து பயன் அடையுங்கள்

நன்றி : சீவக சிந்தாமணி தொடர்ச் சொற்பொழிவு நினைவு மலர், காஞ்சீபுரம்.

---

அன்பளிப்பு : வாசுதேவ் பதிப்பகம் வெளியீடு-3

சிந்தாமணி நாவலர்-சூளாமணிச் சுடர்

**நேமி-சாந்தகுமார் ஜெயின்**

மோட்டூர் கிராமம் 632 317

மொழுகம் பூண்டி (Po) வயா ச. வி. நகரம், தி. ச. மா.

---

வேலு அச்சகம், & பதிப்பகம் வேலூர்-1.